இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 85 – ஒலி : 53 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – புரட்டாசி 15 – வெள்ளிக்கிழமை 02 அக்டோபர் 2026 – திருச்சி ★★ 10 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 85 - Issue 53 : Thiruvalluvar Year - 2057 - Purattasi 15 - Friday 02 October 2026 - Trichy ★★ 10 Pages ₹ 5.00

தாராபுரம் (தனி) தொகுதி இடைத்தேர்தல்! கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் பிரச்சாரம்!



இன்று : (02.10.2026 - வெள்ளிக்கிழமை)

நேரம்	ஒன்றிய / நகர / பேரூர்க் கழகங்கள்	இடம்
காலை 10.30	தாராபுரம் நகரம்	தாராபுரம் அமராவதி சிலையிலிருந்து பொள்ளாச்சி சாலை - பெரியகடை வீதி வழியாக 'ரோடு ஷோ'
மாலை 5.00	தாராபுரம் நகரம்	உடுமலை சாலை மல்லி ரிசார்ட் அருகில் பொதுக்கூட்டம்

தேர்தல் பணிக்குழு

101 - தாராபுரம் (தனி) சட்டமன்றத் தொகுதி

மத்திய கணக்கு தணிக்கைக்குழுவின் ஆய்வில் விஜய் அரசு சிக்கும்!

தாய்மாமன் தங்க மோதிரம் திட்டத்தில் ரூ.136 கோடி ஊழல்!

எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டு!

சென்னை, அக். 2-

விஜய் முதல்வராக வந்த பிறகு அவரது உதவியாளர்கள், நண்பர்கள், சொந்தக்காரர்களுக்கு தான் அரசு பதவி வழங்கி வருகிறார் என்று குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

அதேபோன்றுதற்போதுதாய்மாமன் திட்டத்தில் உள்ள நிறுவனம் ஒரு கிராம் தங்க விலையுடன், மதிப்புக்கூட்டு விலையாக ஒரு பைசா என்று கோரி யுள்ளது.

விஜய் விளம்பர நடிகராக நடித்தார்!

இந்த நிறுவனத்துக்கு விஜய் விளம் பர நடிகராக இருந்தார். அந்த நிறுவ னத்துக்குத்தான் தற்போது டெண்டர் வழங்கியுள்ளார்.

எல்9 டெண்டர் கோரியுள்ள நிறு வனத்தையும் தாய்மாமன் மோதிரம் திட்டத்தில் மோதிரம் வழங்க விஜய் அரசு தேர்ந்தெடுத்துள்ளது.

ஆனால், இந்த நிறுவனத்துக்கு ஒரு கிராம் தங்கம் எவ்வளவு தொகைக்கு வழங்க வேண்டும் என்று வெளிப்படை யாக அறிவிக்கவில்லை.

இதுபோன்ற வெளிப்படைத்தன்மை இல்லாமல் இந்த திட்டத்திற்காக 2 நிறு வனங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் குறைந்தபட்சம் 136 கோடி ரூபாய் ஊழல் நடந்துள்ளதாக வும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இந்நிலையில், விஜய் அரசின் ஊழல்கள், மத்திய தணிக்கை குழுவின் ஆய்வில் அம்பலப்படும் எனஎதிர்க்கட்சிகள் விமர்சித்துள்ளன.

முதல் 91 நாட்களில் 10 நாட்கள் மட்டுமே வேலை கிடைத்துள்ளது!

தி.மு.க. அரசின் 150 நாள் வேலைவாய்ப்பு வாக்குறுதி என்ன ஆயிற்று?

தமிழ்நாடு முழுவதும் 12,480 ஊராட்சிகளிலும் பணிகள் உருவாக்கப்படவில்லை!


சென்னை, அக். 2-

த.வெ.க. அரசு தேர்தல் வாக்குறுதியாக ஆண்டிற்கு, 'வெற்றி 150' திட்டத்தின் கீழ், 150 நாட்கள் கிராமப்புத் தொழிலாளர் களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படும் என்று உறுதி அளித்திருந்தது. ஆனால் தற்போது முதல் 91 நாட்களில் வெறும் 10 நாட்கள் மட்டுமே பணி வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள 12,480 ஊராட்சி களிலும் பணி உருவாக்கப்படாத நிலையில் ஆண்டிற்கு 30 நாட்களுக்கும் குறைவாகவே வேலை கிடைக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் 'ஆண்டிற்கு 150 நாட்கள் வேலை வழங்கப்படும் என்று த.வெ.க. அரசு அளித்த வாக்குறுதிக்கு மாறாக, இது வரை முதல் 91 நாட்களில் கிராமப்புறத் தொழிலாளர்களுக்கு சராசரியாக 10 நாட்கள் மட்டுமே வேலை கிடைத்துள்ளது என்று 'தி டைம்ஸ் ஆப் இந்தியா' செய்தி வெளியிட்டுள்ளது.

இதுகுறித்து வெளியான செய்தி வருமாறு:-



Just 10 days of work in 91 days, far short of TVK's 150-day promise

Shanmughasundaram J
@timesofindia.com

Chennai: Rural workers in Tamil Nadu have received an average of just 10 days of employment in the first 91 days of the VB-G RAM G scheme, falling well short of the TVK govt's promise of 150 days of work under its Vetri 150 scheme.

Since the scheme's launch on July 1, people have been getting work only once every four or five weeks, with most receiving just five or six days of employment. **Officials have reduced the number of workers at each worksite from 50 to 20, further limiting job opportunities for nearly 80 lakh active workers.**

"If the trend continues, workers may get fewer than 30 days of employment in a year, a fraction of the 150 days promised under Vetri 150," said a source in the department of rural development and panchayat raj.

"I have been waiting for work under the scheme for the last four weeks," said Meena of Perutthur village in Prathamaramapuram panchayat in Nagapattinam district. CPI(ML) state-level functionary C Muthivanan said the party had announced a protest on Sept 30, demanding work under the scheme.

"After we announced the protest, officials generated man-days for around 100 workers in Kachaikattu and Viraliyatti panchayats in Vaitiyatti block of Madurai district. Before that, work was provided to only two or three people. Many depend on this scheme for their livelihood," he said.

This is the situation in almost all of TN's 12,469 odd panchayats, except in Kallakurichi district, where the number of works generated is relatively high. No work was generated in 43 panchayats. Adding to their woes, workers in several panchayats have not been paid for three to four weeks. An official in the rural development and panchayat raj department said the wages would be paid soon.

CPM state secretary P Shanmugam flagged the issue with a social media post last week, saying workers in Adiramapuram village near Maduranthakam had been waiting for their wages for four weeks.

A senior official said there are "some teething problems" in implementing the scheme, which was revamped with a new set of rules.

"On Monday, we generated more than 12 lakh man-days across the state. The number will gradually increase and touch the state's average of 50 man-days per household by the end of this fiscal year," the official said.

WORK GUARANTEE

- Workers received just 10 days of work in 90 days, against TVK's 150-day promise
- Work is provided once every four to five weeks, with worksite capacity cut from 50 to 20
- No work has been generated in 43 panchayats; wage payments are delayed by up to four weeks
- Govt claims over 12 lakh man-days were generated on Monday and expects employment to rise

இத்திட்டம் ஜூலை 1ஆம் தேதி தொடங் கியதிலிருந்து, மக்களுக்கு நான்கு அல்லது ஐந்து வாரங்களுக்கு ஒருமுறை மட்டுமே வேலை கிடைக்கிறது; அதுவும் வெறும் ஐந்து அல்லது ஆறு நாட்களுக்கு மட்டுமே வேலைவாய்ப்பு உள்ளது. ஒவ்வொரு பணித்தளத்திலும் பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகாரிகள் 50 லிருந்து 20ஆகக் குறைத்துள்ளனர்; இது சுமார் 80 லட்சம் தொழிலா ளர்களின் வேலை வாய்ப்பு வாய்ப்பு களை மேலும் குறைத்துள்ளது.

"இப்போதைய போக்கு தொடர்ந் தால், 'வெற்றி 150' திட்டத்தின் கீழ் உறுதியளிக்கப்பட்ட 150 நாட்களுக்குப் பதிலாக, தொழிலாளர் களுக்கு ஓர் ஆண்டில் 30 நாட்களுக்கும் குறைவான வேலைவாய்ப்பே கிடைக்கக் கூடும்" என்று ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை வட்டாரங்கள் தெரி வித்தன.

"கடந்த நான்கு வாரங்களாக இத்திட் டத்தின் கீழ் வேலை கிடைப்பதற்காக நான் காத்திருக்கிறேன்" என்று நாகப்பட்டினம் மாவட்டம், பிரதமராமபுரம் ஊராட்சிக்கு உட்பட்ட பெருத்தூர் கிராமத்தைச் சேர்ந்த மீனா கூறினார். இத்திட்டத்தின் கீழ் வேலை வழங்கக் கோரி செப்டம்பர் 30ஆம் தேதி போராட்டம் நடத்தப்படும் என்று அறிவித் துள்ளதாக சி.பி.ஐ. (எம்.எல்.) மாநில நிர்வாகி சி.மதிவாணன் தெரிவித்தார்.

"நாங்கள் போராட்டத்தை அறிவித்த பிறகு, மதுரை மாவட்டம் வாடிப்பட்டி ஒன்றியத்திலுள்ள கச்சைகட்டு மற்றும் விராலிப்பட்டி ஊராட்சிகளில் சுமார் 100 தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கப்பட்டது. அதற்கு முன்பு, இரண்டு அல்லது மூன்று பேருக்கு மட்டுமே வேலை வழங்கப்பட்டிருந்தது. பலர் தங்கள் வாழ் வாதாரத்திற்காக இத்திட்டத்தையே நம்பி யுள்ளனர்" என்று அவர் கூறினார்.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தைத் தவிர, தமிழ்நாட்டின் சுமார் 12,480 ஊராட்சிகள் அனைத்திலும் ஏறக்குறைய இதே நிலை தான் காணப்படுகிறது; கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் மட்டும் ஒப்பீட்டளவில் அதிக எண்ணிக்கையிலான பணிகள் உரு வாக்கப்பட்டுள்ளன. 43 ஊராட்சிகளில் எந்தப் பணியும் உருவாக்கப்படவில்லை.

தொழிலாளர்களின் துயரத்தை அதிக ரிக்கும் விதமாக, பல ஊராட்சிகளில் அவர் களுக்கு கடந்த மூன்று முதல் நான்கு வாரங்களாக ஊதியம் வழங்கப்படவில்லை. ஊதியம் விரைவில் வழங்கப்படும் என்று ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இடைத்தேர்தல் நடக்கும் தொகுதிகளில் அமைச்சர்கள் முகாம்!

அரசு நிர்வாகம் முழுமையாக ஸ்தம்பித்தன!

சென்னை, அக். 2-

தாராபுரம் - மதுராந்தகம் தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டு இருக்கும் நிலை யில் தாராபுரம் தொகுதியில் முதலமைச்சர் விஜய் பிரச்சாரம் செய்ததையொட்டி பெரும்பான் மையான அமைச்சர்கள் அங்கே முகாமிட்டு இருக்கின்றனர்.

பட்டினப்பாக்கம் தலைமைச் செயலக போராட்டம், மேகமலை நில மீட்பு போராட்டம், டெல்டாவில் விவசாயிகள் போராட்டம் என தமிழ்நாடு கொந்தளிக்கும் நிலை யில் அமைச்சர்கள் இடைத்தேர் தல் பணிகளில் மட்டுமே கவனம் செலுத்தி வருவதாகவும், இதனால் ஆட்சிப் பணிகள் பாதிக்கப்பட்டிருப் பதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

அ.தி.மு.க. எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்துவிட்டு தமிழக வெற்றிக் கழகத்தில் இணைந்த மதுராந்தகம் மரகதம் குமர வேலும், தாராபுரம் சத்யபாமாவும் மீண்டும் போட்டியிடுகின்றனர்.

திராவிட முன்னேற்றக் கழகம் தரப்பில் மதுராந்தகம் தொகுதி யில் பரந்தாமனும், தாராபுரம் தொகுதியில் சுகன்யாவும் போட்டி யிடுகின்றனர்.

இடைத்தேர்தல் அ.தி.மு.க. தரப்பில் கணிதா சம்பத், பானுமதி களமிறங்குகின்றனர்.

பிரதான மூன்று கட்சிகளும் வேட்பாளர்களை களமிறக்கி இருக்கும் நிலையில் நாம் தமிழர், கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர்கள், சுயேசைகள் என பலரும் களத்தில் இருக்கின்றனர்.

